

நெல்லை மாவட்டம் பாபநாசம் நீர்த் தேக்கத்திலிருந்து பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீரை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தார்.

தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தரும்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி அறிக்கை!

தருமபுரி, நவ. 3 -

தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணியின் மகன் ஏ.எம்.பிரகதீஸ்வரன்ஜி. மதுபிரதிக்ஷா ஆகியோரது திருமணம் தருமபுரி ஜோதி மகாலில் இன்று( நவ 3) நடைபெறுகிறது.இத்திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைக்க திமுக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தனி விமானத்தில் புறப்பட்டு காலை 9 மணிக்கு சேலம் விமான நிலையம்



வந்தடைகிறார்.பின்னர் சாலை மார்கமாக தருமபுரிக்கு வருகை தரும் அவர் திருமணவிழாவில் பங்கேற்று மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்குகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சரின் தருமபுரி வருகையை ஒட்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மகேஸ்வரன் தலைமையில் பாதுகாப்பு பணிகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர். ஆ. மணி எம்.பி விடுத்துள்ள அறிக்கையில் எனது மகன் திருமணத்தில் கலந்து கொள்ள தருமபுரி வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகதலைவர் அவர்களை சிறப்பான முறையில் வர வேற்றிட கழக முன்னாள் நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய,பேரூர், கழகத்தினர்,அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், கிளை கழகத்தினர், கழக முன்னோடிகள் என அனைவரும் திரளாக பங்கேற்க வேண்டும் என்று தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆ.மணி எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.



திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பாக நிலை முகவர்கள்– BLA2 பாக சமூக வலைதள முகவர்கள் – BDA இளைஞரணி மைப்பாளர்கள்– BYAஅவசர ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு களப்பணிகள் குறித்து பாக முகவர்கள் கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இதில் தொகுதி பார்வையாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, கே.எஸ். ரவிச்சந்திரன், சரிதா மகேஷ் குமார் எம்.சி., பகுதி கழக செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன்,எம் சாமிக்கண்ணு, மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி - கீரனூரில் புதிய ரேஷன் கடை!

## அமைச்சர் அர.சக்கரபாணி திறந்து வைத்தார்!

ஒட்டன்சத்திரம், நவ.3-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கீரனூர் பேரூராட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ரேஷன் கடை மற்றும் உயர்மின் கோபுர மின் விளக்கினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்து

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்பு கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், சாலை வசதிகள், பாதாள சாக்கடை வசதிகள், தெரு விளக்கு, குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளை வழங்கி வருகிறார்கள். அதனடிப்படையில் தினம் கீரனூரில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தலா ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ரேஷன் கடை மற்றும் உயர்மின் கோபுர மின் விளக்கினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், கீரனூர் ஊராட்சியில் நேரடி கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்பு 12 கோடியில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் நடைபெற்றுள்ளன. 432 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன என பேசினார்.

இந்நிகழ்ச்சியில், நாடளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம், ஒன்றிய செயலாளர் பொன்ராஜ், வட்டாட்சியர் பிரசன்னா, செயல் அலுவலர் ரோஹினி, பேரூர் செயலாளர் அன்பு (எ) காதர் பாட்சா, பேரூராட்சித் தலைவர் கருப்புசாமி, துணைத்தலைவர் ஹாஜி அப்துல்சுக்கூர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அம்பாசமுத்திரம் புறவழிச் சாலை -

# ரூ.65.99 கோடியில் கல்லிடைக்குறிச்சி பொட்டல் பகுதியில் புதிய சாலை!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை. நவ. 3 -

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் புறவழிச் சாலையை முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக (01.11.2025) அன்று துவக்கி வைத்தார்கள்.

அதனை தொடர்ந்து அம்பாசமுத்திரம் புறவழிச் சாலை கல்லிடைக்குறிச்சி பொட்டல் பகுதியில் ரூபாய் 65.99 கோடியில் திருச்செந்தூர், பாபநாசம்,தென்காசி, குற்றாலம், செங்கோட்டை ஆகிய ஊர்களுக்கு செல்லும் வசதியாக புதிதாக அமைக்கப்பட்ட புறவழிச் சாலை துவக்க விழா நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு.இரா சுகுமார் தலைமையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் மரக்கன்றுகளை நட்டு வைத்து அப்பகுதி மக்களுக்கு இனிப்புகள் வழங்கி சிறப்பித்தார்.

பின்னர் சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் ஏழை,எளிய மக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பான திட்டங்களை அறிவித்து தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அம்பாசமுத்திரம் புறவழிச் சாலை அமைக்க வேண்டும் அம்பாசமுத்திரம் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று முதல்வர் அவர்கள் புறவழிச் சாலையினை காணொலி காட்சி வாயிலாக இன்று திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது போக்குவரத்து தடையில்லாமல் இயங்கவும்,பொது மக்களின் நேர விரய த்தை தவிர்க்கவும், விபத்துக்களை குறைக்கவும், இப்பகுதியில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும், அம்பாசமுத்திரம் புறவழிச்சாலை முக்கிய பங்கு வகிக்கிறது.

அ.தி.மு.க.விலிருந்து சட்டமன்ற உறுப்பினர் செங்கோட்டையன் நீக்கம் செய்யப்பட்டது.தொடர்பாக எந்த கடிதமும் அ.தி.மு.க. சார்பில் சட்டமன்ற பேரவைக்கு கொடுக்கவில்லை. அவ்வாறு கடிதம் அளிக்கும் பட்சத்தில் மனு மீது பரிசீலனை செய்யப்படும். அ.தி.மு.க.அளிக்கும் ஆவணத்தின் அடிப்படையில் ஆய்வு நடத்தி செங்கோட்டையன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

பாரதப் பிரதமர் உயர் பதவியில் இருந்து கொண்டு தேர்தலுக்காக தமிழகம் குறித்த வார்த்தைகளை பயன்படுத்தி இருக்க வேண்டாம். தமிழகத்தில் வடமாநிலத்தவர் கள் துன்பமாக இல்லை,இன்பமாக இருக்கின்றனர்.வட மாநிலத்தில் இருந்து தமிழகத்தில் வசிப்பவர்களும் தமிழக அரசின் திட்டங்களை பயன்படுத்தி பயன் பெற்று வருகின்றனர்.

பா.ஜ.க.கூட்டணியில் உள்ள நிதீஷ் குமார் செய்யும் துன்பத்தால் தான் அங்கிருந்து புலம்பெயர்ந்து, அங்கு உள்ளவர்கள் தமிழகம் வந்து,இன்பமாக வாழ்கிறார்கள்.பாபநாசம் மணிமுத்தாறு அணையை இணைப்பதற்கான ஆய்வு நடத்தி திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.நகராட்சி நிர்வாகத் துறையில் 2538 பணி இடங்களை அமைச்சர் கே.என்.நேரு நேர்மையாக வெளிப்படை தன்மையோடு அண்ணா பல்கலைக்கழக உதவியுடன் நியமனம் செய்துள்ளனர்.பணி நியமனத்தில் எந்த தவறும் நடைபெறவில்லை.அமலாக்கத்துறை தமிழக டி.ஜி.பி.க்கு பணி நியமனத்தில் ஊழல் நடந்திருப்பதாக விசாரணை நடத்த கடிதம் அனுப்பி உள்ளது.இந்த கடிதம் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது,நீதிமன்ற அவமதிப்பு ஆகும். உறுதிப்படுத்தப்படாத ஆவணங்கள் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை அல்லது விசாரணை ஆகியவையை அனுமதிப்பது ஜனநாயகத்திற்கு எதிரானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அமலாக்கத்துறை ஆகியவை சகாரா நிறுவனத்தில் 2017 ம் ஆண்டு சோதனை நடத்திய போது தற்போதைய பிரதமர் குஜராத் முதலமைச்சராக இருந்த போது 25 கோடியை நான்கு தவணையாக கையூட்டு பெற்றதாக தகவல் வெளியானது.இது தொடர்பாக பொதுநல வழக்கில் பிரதமர் மீது சுமத்தப்பட்ட கையூட்டு குற்றச்சாட்டு தொடர்பாக சிறப்பு புலனாய்வு குழு அமைத்து விசாரிக்க கேட்கப்பட்டது. அந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் உயர் அரசியலமைப்பு செயல்பாட்டாளர்கள் மீது உறுதி செய்யப்படாத ஆவணங்கள் மூலம் விசாரணைக்கு உத்தரவிட்டால் ஜனநாயகத்திற்கு ஆபத்தானது, எதிரானது,என தீர்ப்பளித்தனர்.எந்த தவறும் செய்யாத அமைச்சர் கே என் நேரு மீது ஊழல் குற்றச்சாட்டு என அமலாக்கத்துறை தமிழக டி.ஜி.பி.க்கு தபால் கொடுத்துள்ளது. உச்சநீதிமன்றத்தின் உத்தரவை மீறி உறுதிப்படுத்தப்படாத ஆவணங்களை வைத்து அமைச்சர் நேரு மீது ஊழல் குற்ற சாட்டினை வைத்து தமிழக டி.ஜி.பி.க்கு கடிதம் அனுப்பியது தவறு.குஜராத் முதலமைச்சர் ஆக இருந்தபோது பிரதமர் மோடி கையூட்டு பெற்றதாக வெளியான ஆவணங்களை வைத்து அமலாக்கத்துறை அவரை கைது நடவடிக்கைக்கு ஆணையிடுமா அதற்கு அமலாக்க துறைக்கு தைரியம் உள்ளதா? என அவர் கேள்வி எழுப்பினர்.

மணல் ஊழல் டாஸ்மாக் ஊழல் என உறுதிப்படுத்தப்படாத தகவல்களை வைத்து தேர்தல் நேரத்தில் தமிழக அரசுக்கு நெருக்கடி கொடுக்கலாம் என்ற ஒத்த நோக்கத்தில் இது போன்று அமலாக்கத்துறை செயல்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் மீது அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை செய்ய டி.ஜி.பி.க்கு கடிதம் அனுப்பிய குற்றத்திற்காகவே அமலாக்கத்துறை அதிகாரி மீது 2017 உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி மீது நடவடிக்கை எடுக்கலாம்.தேர்தல் நேரத்தில் அமலாக்கத்துறை வேண்டுமென்றே இதுபோன்று செயல்படுகிறது.தமிழக ஆளுநர் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய பாதி மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளார். மீதி மசோதா அவரிடமே கிடப்பில் உள்ளது.

இவ்வாறு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் பரணிசேகர், விக்ரமசிங்கபுரம் நகர்மன்ற தலைவர் செல்வசுரேஷ் பெருமாள்,அம்பை நகர் மன்றத் தலைவர் பிரபாகரன், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி துணை தலைவர் இசக்கிப்பாண்டி,ஆலங்குளம் தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார் ஆதித்தன், மாவட்ட துணைச் செயலாளர் மைக்கேல், ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, ராஜன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் சாலமன் டேவிட்,அருண் தவசு பாண்டியன்,வி.கே.புரம் நகர செயலாளர் கணேசன்,அரசு வழக்கறிஞர் காந்திமதி நாதன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

# நெல்லை கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது!

நெல்லை, நவ. 3 -

நெல்லை கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம், வள்ளியூர் மாவட்ட அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது.

கழகத் தலைவர்,தமிழ் நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு தலைகுனியாது "என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி" (28.10.2025) அன்று நடைபெற்ற பயிற்சி கூட்டத்தில் குறிப்பிட்ட SIR பணிகளை செய்வது சம்மந்தமாக முடிவு செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில் நெல்லை கிழக்கு மாவட்ட கழக அவசர செயற்குழுக் கூட்டம் வள்ளியூர் மாவட்ட கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைப்பபெற்றது.

பின்னர் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் வாக்குச்சாவடியில் முழு கவனம் செலுத்தி, அனைத்து வாக்குச்சாவடிகளிலும் அதிகமான வாக்குகளை பெற அயராது உழைக்க வேண்டும்.

ஏழாவது முறையாக கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் ஆட்சி அமைக்க நாம் முழுமூச்சுடன் செயல்பட வேண்டும்.என்றார்.

நிகழ்வில் இராதாபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மு.சிவ ராஜ், மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல், பொதுக் குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன், கனகராஜ்,சாந்திசுபாஷ், ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்ஸி, எரிக்ஜுடு, சேவியர் செல்வராஜா,அலெக்ஸ் அப்பாவு, போர்வல் கணேசன், செல்வ கருணாநிதி, ராஜன், சுபாஷ் தங்கபாண்டி, நகரச் செயலாளர் மணிசூரியன்,பேரூர் செயலாளர்கள் அயூப்கான், சேதுராமலிங்கம், கசமுத்து, தமிழ்வாணன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மல்லிகா அருள்,முருகன், எஸ்.என். முருகன், மாவட்ட மகளிரணி தலைவி கமலாநேரு சுயம்புராஜன், அனுராதா சரவணன்,இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தில்லை ராஜா, மனோஜ், அறங்காவலர்குழு தலைவர் அசோக் குமார்,ஜோசப் சந்திரன், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் தவசிராஜன், ஆதிபாண்டி, இசக்கிபாண்டி, கோபி கோபால கண்ணன், சுரேஷ், நேவில், செல்வராஜ், ஜார்ஜ்,சேகர், லெட்சுமணன்,தகவல் தொழில் நுட்ப அணி சரவணன், வழக்கறிஞர் பாலசந்தர், சுப்பிரமணி, செல்வின், மணிகண்டன், ஆனந்த், சுரேஷ், சுரே ஷ்பாக்கியம்,மாவட்ட பிரதிநிதி நயினார், ராஜகோபால், முத்துராஜ், இலங்காமணி, ராஜா உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதி BLA2 ,BDA, BYA ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார். கூட்டத்தில் கன்னிகை ஜி.ஸ்டாலின், இரா.கருணா, அ.முருகன் எஸ்.ஆர்.கமலக்கண்ணன் வி.தயாளன், மு. உமாபதி, இரா.அரிதாஸ், கே.வி.இராஜன், என்.கார்த்தீபன், கே.ஈ.செந்தமிழரசு, சி.எஸ்.ரவி, க.சர்மிளாகாந்தி எம்.சி., மற்றும் பகுதி வட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

# மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு திருப்பூர் தெற்கு, விழுப்புரம் தெற்கு ஆகிய மாவட்ட தி.மு.க. சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் தெற்கு மாவட்டம்

**தலைவர்:-** ஜெ. நவாஸ் 55, விஜயகணபதி நகர், சூளேஸ்வரன்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642006, திருப்பூர் மாவட்டம்.

**துணைத் தலைவர்:** எஸ். சையது ஹக்கீம் 3/107, மின் நகர், உடுமலை சாலை, மாக்கினாம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642003, திருப்பூர் மாவட்டம்.

**அமைப்பாளர்:** வி.என். ஷாஜகான் 115, செல்லமுத்து வீதி, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்** : 1) அ. அபிபுர்ரஹ்மான் 1/82, பள்ளிவாசல் வீதி, சோழமாதேவி அஞ்சல், மடத்துக்குளம் - 642113, திருப்பூர் மாவட்டம். 2) அ. ஹீமாயூன் 79எ, பள்ளிவாசல் வீதி, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 3) எஸ். முகமது இஸ்மாயில் 43, கோசா வீதி, கணியூர் அஞ்சல், மடத்துக்குளம் - 642203, திருப்பூர் மாவட்டம். 4) டி. கிதியன் சுரேஷ் 5, என்.ஜி.ஜி.ஒ. குடியிருப்பு, சூளேஸ்வரன்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642006, திருப்பூர் மாவட்டம். 5) நா. மாலிக்கராஜ் 3/388, தி திரட் பார்க், குடிமங்கலம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் - 642201. 6) ஏ. ராபர்ட் அம்மே கவுண்டனூர், கஞ்சம்பட்டி அஞ்சல் - 642003, பொள்ளாச்சி, திருப்பூர் மாவட்டம்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

தலைவர்: எம்.எஸ்.கே. அக்பர் 226, காமராஜர் நகர், அரகண்டநல்லூர், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர்: அ. அந்தோணி 81, வடக்கு தெற்கு தெரு, செ. புதூர், மூட்டத்தூர் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

**அமைப்பாளர்** : பிரேமா அல்போன்ஸ் ஆற்காடு மெயின் ரோடு, ஆயந்தூர் மற்றும் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்** : 1) எம். விக்டர் பவுல்ராஜ் 1114, மாதா கோவில் தெரு, முகையூர் மற்றும் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) கே. பவுல்ராஜ் ஒதியத்தூர் மற்றும் அஞ்சல், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 3) ஆ. அஞ்சலீனா பிள்ளையார் கோவில் தெரு, செல்லங்குப்பம், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 4) த. அருண்குமார் டவி தெரு, நங்காத்தூர், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) ப. பிராங்கினின் பெட் மாதா கோவில் தெரு, ஒட்டன்காடுவெட்டி, மாம்பழப்பட்டு மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 1.11.2025

டாக்டர் **அ.சுபேர்கான்**
செயலாளர், தி.மு.க.
சிறுபான்மையினர் நல
உரிமைப் பிரிவு